நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, திருவில்லிபுத்தூர்.

**முன்னிலை – செல்வி.தி.சுபாஷினி., B.Com., L.L.B(Hons)., L.L.M.,**

நீதித்துறை நடுவர் எண்.II, திருவில்லிபுத்தூர்.

2025 ம் ஆண்டு ஜீலை மாதம் 7 ம் நாள் புதன்கிழமை

**Cr.M.P.No.4452/2022**

**IN**

**Cr.M.P.No.1253/2015**

**IN**

**Cr.M.P.No.8182/2011**

சிலம்பரசன்,
த/பெ.சந்திரன் ... மனுதாரர்/எதிர்மனுதார்

/எதிர்/

1.மாரீஸ்வரி,
த/பெ.முருகன், ...1 ம் எதிர்மனுதாரர்/மனுதாரர்

2.ராஜமுத்து (எ) காளிமுத்து,
த/பெ.காளிமுத்து,, ...2 ம் எதிர்மனுதாரர்

இம்மனு கடந்த 08.07.2022 ம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டு, 19.07.2022 ம் தேதி இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு 07.07.2026 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றிறந்த வழக்கறிஞர் திரு.M.தங்கபாண்டியன் M.A., B..L., அவர்கள் ஆஜராகியும், 1 ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.வடிவேல் B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று 07.07.2026 ம் தேதி இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்...

**உத்தரவு**

மனுதாரர் தரப்பில் கு.வி.மு.ச. பிரிவு 1973 பிரிவுகள் 125(5) மற்றும் 127(2)ன் படி வாழ்க்கை பொருளுதவி உத்தரவை ரத்து செய்யக் கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1.மனுதாரர் மனுவின் சுருக்கம்**

இம்மனுவின் மனுதாரர் 1 ம் எதிர்மனுதாரரான மாரீஸ்வரியை காதலித்து திருமணம் செய்து கொண்டதாகவும், திருப்பூரில் குடியிருந்ததாகவும், தனக்கு ஒரு

ஆண்மகன் பிறந்தான் என்றும், அதன் பின்னர் தனக்கு மனைவிக்கும் சிறு சிறு குடும்ப பிரச்சனை ஏற்பட்டு தன் மீது தனது மனைவி திருவில்லிபுத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாள் என்றும், தான் மனு விசாரணையில் தான் சேர்ந்து வாழ கூப்பிட்டதாகவும், சேர்ந்து வாழ வர மறுத்து விட்டாள் அதன் பின்னர் தான் திருவில்லிபுத்தூர் சார்பு நீதிமன்றத்தில் மாரீஸ்வரியை விசாகரத்து கூறி தாக்கல் செய்த மனுவை திருவில்லிபுத்தூர் குடும்ப நல நீதிமன்றத்தில் மாற்றம் செய்யப்பட்டு தன் மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், அதே போல் தன் மனைவி மாரீஸ்வரி திருவில்லிபுத்தூர் சார்பு நீதிமன்றத்தில் தன்னை சேர்ந்து வாழக்கோரி மனு தாக்கல் செய்திருந்தால் அந்த மனுவானது திருவில்லிபுத்தூர் குடும்ப நல நீதி மன்றத்தில் மனு அனுமதிக்கபட்டது என்றும், அதே போல் திருவில்லிபுத்தூர் குற்றவியல் நீதிமன்றம் 2 ல் குடும்பவன் கொடுமை பாதுகாப்பு சட்டத்தின் கீழ் தன்னையும் தன் குடும்பத்தாரையும் மனு தாக்கல் செய்து CRMP.NO.8182/11 ல் கீழ் ஜீவனாம்சம் கொடுத்து வருவதாகவும், அந்த மனுவை நிறை வேற்றல் மனுவை நிலுவையில் இருந்து வருகிறது என்றும், தான் தன் மனைவி தன்னுடன் சேர்ந்து வாழ்வதற்கு உத்தரவு பிறப்பித்த பின்பு தான் நிறைவேற்றல் மனு குறித்தம் தான் திருவில்லிபுத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் மேல் முறையீடு மனு தாக்கல் செய்து CA.NO.144/14 வழக்கும் CA.NO.52/19 வழக்கும் நிலுவையில் இருந்து வருகிறது என்றும், தான் தன் மனைவி மாரீஸ்வரியோடு கருத்து ஒற்றுமை ஏற்பட்டு தாங்கள் வாழ்ந்து வந்த போது அந்த ஜீவனாம்சத்தை ரத்த செய்யச் சொல்லி CA.NO.52/19 வழக்கு நிலுவையில் உள்ளது சேர்ந்து வாழ வர மறுத்து விட்டான் அதன் பின்னர் தான் திருவில்லிபுத்தூர் சார்பு நீதிமன்றத்தில் மாரீஸ்வரியை விவாகரத்து கூறி தாக்கல் செய்த மனுவை திருவில்லிபுத்தூர் குடும்ப நல நீதி மன்றத்தில் மாற்றம் செய்யப்பட்ட தன் மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், அதே போல் தன் மனைவி மாரீஸ்வரி திருவில்லிபுத்தூர் சார்பு நீதிமன்றத்தில் தன்னை சேர்ந்து வாழக்கோரி மனு தாக்கல் செய்திருந்தால் அந்த மனுவானது திருவில்லிபுத்தூர் குடும்ப நல நீதி மன்றத்தின் மனு அனுமதிக்கப்பட்டது என்றும், அந்த மனுவை நிறை வேற்றல் மனுவை CRMP.NO.1253/15 ல் நிறை வேற்றும் மனு நிலுவையில் இருந்த வருகிறது தான் தன் மனைவி தன்னுடன் சேர்ந்து வாழ்வதற்க உத்தரவு பிறப்பித்த பின்பு தான் நிறைவேற்றல் மனு குறித்தும் தான் திருவில்லிபுத்தூர் முதன்னை மாவட்ட அமர்வு

நீதிமன்றத்தில் மேல் முறையீடு மனு தாக்கல் செய்து CRMP NO. 144/14 வழக்கும் CRMP NO.52/19 வழக்கும் நிலுவையில் இருந்து வருகிறது. தான் என் மனைவி மாரீஸ்வரியோடு கருத்த ஒற்றுமை ஏற்பட்டு நாங்கள் வாழ்ந்து வந்த போது அந்த ஜீவனாம்சத்தை ரத்து செய்யச் சொல்லி CRMP NO. 52/19 வழக்கு நிலுவையில் உள்ளது என்றும், தன் மனைவி மாரீஸ்வரி ராஜபாளையம் ஜெயாவிலாஸ் மில்லுக்கு சென்று வந்தால் இச்சூழ்நிலையில் 2ம் எதிர்மனுதாரரான காளிமுத்து என்பவர் தன் மனைவிடம் ஆசபாசமாக பழகி தற்சமயம் இருவரும் காதல் வசப்பட்டு குடும்பமாக வாழ்ந்து வருவதாகவும், தன்னை விட்டு மாரீஸ்வரி ராஜபாளையத்தில் வேலை பார்த்தவர் காளிமுத்துவின் கள்ளக் காதலுக்கும் ஆசபாசத்திற்கும் அவருடன் இணங்கி குன்னூர் அருகில் உள்ள சுப்புராஜ் காட்டன் மில்லில் வேலை செய்து வரும் தன் மனைவி மாரீஸ்வரியை சுப்புராஜ் காட்டன் மில்லுக்கு இரு சக்கர வாகனத்தில் கொண்டும் வருகிறார் இந்த கள்ள உறவை மாரீஸ்வரியின் பெற்றோருக்கும் காளிமுத்துவின் பெற்றோருக்கும் தெரியும் என்றும், மாரீஸ்வரியின் வீட்டுக்கு சென்று உணவு சாப்பிட்டு சந்தோஷமாக இருந்து வருகிறார் மாரீஸ்வரி மேலும் திருவில்லிபுத்தூர் நீதிமன்றத்திற்கு வரும் போதெல்லாம் காளிமுத்துவின் இரு சக்கர வாகனத்தில் சென்று வருவதால்,இது சம்பந்தமாக தான் கண்டித்தும் தனக்கு காளிமுத்து தான் தனக்கு வேண்டும் என்று கூறி விட்டதாகவும், காளிமுத்து குன்னூர் கிராமத்தில் தன் மனைவியை பல இடங்களில் ஊர் சுற்றி வருவதாகவும் கேள்விபட்டதாகவும், தன்னுடைய செல்போனுக்கு தன் மனைவி மாரீஸ்வரியும் காளிமுத்துவும் சேர்ந்து காதல் டுயட் பாடும் காட்சிகள் வாட்ஸ் அப் பேஸ்புக்கில் வந்தது என்றும், இதைப் பார்த்து தான் அதிர்ந்து போனேன் அதனால் அந்தக் காட்சியை பொதுமக்கள் பார்த்து அதைப்பற்றி கேட்டதால் தனக்கு பெரும் அவமானமாகி விட்டது என்றும், அந்தக் கள்ளக்காதல் தனக்கு பெரும் அச்சத்தை உண்டாக்கியது என்றும், ஆகவே அவர்கள் இருவராலும் தனக்கு உயிர் பாதுகாப்பு இல்லை என்றும், ஆகவே அவர்கள் பாடிய காதல் டுயட் காட்சியையும் சி.டியையும் போட்டோவையும் இத்துடன் இணைத்துள்ளதாகவும், எனவே தன் மனு மீது விசாரணை செய்து சட்டப்படி நடவடிக்கை எடுக்கும் படி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

## 1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்

மனுதாரர் மனுவில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பான பொய் சந்தகிகள் என்றும், மனுவில் கூறியுள்ள சங்கதிகளில் 1ம்எதிர்மனுதாரர் தரப்பில் வெளிப்படையாக ஒப்புக்கொண்ட சங்கதிகள் தவிர இதச சங்கதிகள் அனைத்தும் பொய்யானவை என 1ம் எதிர்மனுதாரரால் மறுக்கப்படுகிறது என்றும், அவைகளை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் என்றும், உண்மையில் என்னவெனில் மனுதாரர்/எதிர்மனுதாரர் கடந்த 2000ல் 1ம் எதிர்மனுதாரர்/மனுதாரரை காதலித்து திருமணம் செய்ய திருப்பூரில் வாழ்ந்து வந்த போது 1–ம் எதிர்மனுதாரர்/மனுதாரரையும் அவரது கைக்குழந்தையையும் நிர்கதியாக விட்டுவிட்டு ஓடிவிட்டதால், மாண்புமிகு நீதிமன்றத்திலும் குடும்ப நல நீதிமன்றத்திலும் இருதரப்பினரும் வழக்கு தாக்கல் செய்து நிலுவையில்ல இருந்து வரும் நிலையில் மனுதாரர்/எதிர்மனுதாரர் சங்கீதா என்ற பெண் உடன் கள்ளத்தனமாக உறவு வைத்துள்ளதை தெரிந்து மாண்புமிகு நீதிமன்றத்தில் குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டு தண்டனை விதிக்கப்பட்டதாகவும், மாண்புமிகு நீதிமன்றத்தில் குடும்ப பெண்கள் வன்முறை வழக்கில் மாதம் ரூ.4000/– செலுத்த உத்தரவிட்டு இருந்தும் அதை முறையாக செலுத்தாமல் கடந்த 08.06.2018–ல் Cr.M.P. No. 5311/2018–ல் Cr.P.C 127(2) ன் கீழ் இதே போன்ற மனுவை தாக்கல் செய்து பின்பு தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், தற்பொழுது வேண்டுமென்றே 1ம் எதிர்மனுதாரர்/மனுதாரர் மீது வீண் பழி சுமத்தி பொய்யான காரணங்களின் அடிப்படையில் அவதூறு பரப்பி, தொடர்ந்து பல்வேறு கொடுமைகள் செய்து துன்புறுத்தி அதன் அடிப்படையில் ஜீவனாம்ச தொகை செலுத்துவதிலிருந்து தப்பிக்க முயற்சித்து வருவதாகவும், மனுதாரர்/எதிர்மனுதாரர் சமூக வலைத்தளங்களில் அவதூறு பரப்பி வருவதை தடுக்க கோரி கிருஷ்ணன்கோவில் காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்ததில் நீதிமன்றத்தில் ஜீவனாம்ச வழக்கு நிலுவையில் இருந்து வருவதால், நீதிமன்றம் மூலமே பரிகாரம் தேடிக்கொள்ள அறிவுறுத்தி அனுப்பிவிட்டதாகவும், எனவே மனுதாரர்/எதிர்மனுதாரர் தாக்கல் செய்திருக்கும் தாவா மனுவை 1ம் எதிர்மனுதாரர்/மனுதாரர் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து ஜீவனாம்ச நிலுவைத் தொகையை செலுத்த உத்தரவிடுமாறு 1–ம் எதிர்மனுதாரர்/மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவை அனுமதிப்பதா? இல்லையா?

4. இருதரப்பும் கேட்கப்பட்டது. மனு மற்றும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இம்மனுவின் 1ம் எதிர்மனுதாரர் தனது மனைவியாக இருந்த போதிலும், 2 ம் எதிர்மனுதாரருடன் சட்டவிரோதமான தொடர்பு வைத்து குடும்பமாக வாழ்ந்து வருவதாகவும், அதனால் தனக்கு உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும், இதுகுறித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மனுதாரர் கோரியுள்ளார். ஆனால் 1ம் எதிர்மனுதாரர் தனது எதிருரையில் மனுதாரரே திருமண வாழ்க்கையை கைவிட்டு வேறொரு பெண்ணுடன் நீண்டகாலமாக இணைந்து வாழ்ந்து வருபவர் என்றும், நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட ஜீவனாம்ச உத்தரவிலிருந்து தப்பிப்பதற்காகவும், தன்னுடைய தவறுகளை மறைப்பதற்காகவும், தன் மீது பொய்யான மற்றும் அவதூறான குற்றச்சாட்டுகளை சுமத்தி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும் வாதிட்டுள்ளார்.

5. மனுதாரரின் மனுவை முழுமையாக ஆராய்ந்தபோது, அவர் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகளின் அடிப்படை முழுவதும் 1ம் எதிர்மனுதாரர் மற்றும் 2ம் எதிர்மனுதாரர் இடையே தொடர்பு இருப்பதாகக் கூறப்படும் சந்தேகம், வாட்ஸ்அப், பேஸ்புக் போன்ற சமூக வலைதளங்களில் வந்ததாகக் கூறப்படும் புகைப்படங்கள், காணொளிகள் மற்றும் சிலரிடம் கேட்ட தகவல்கள் ஆகியவற்றின் மீதே அமைந்துள்ளது என்பது தெளிவாகிறது. ஆனால், இத்தகைய குற்றச்சாட்டுகளை உறுதிப்படுத்தக்கூடிய சுயாதீனமான சாட்சியங்களோ, நம்பகமான மின்னணு ஆதாரங்களோ, இந்திய சாட்சியச் சட்டத்தின் விதிகளுக்கிணங்க தாக்கல் செய்யப்பட்ட சான்றிதழ்களோ, அல்லது வேறு உறுதியான ஆவணங்களோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை.

6. மேலும், மேற்படி குற்றச்சாட்டை நிரூபிப்பதற்கான பொறுப்பு முழுமையாக குற்றச்சாட்டை முன்வைக்கும் தரப்பினரிடமே உள்ளது.மேற்படி குற்றச்சாட்டுகள் மிகவும் தீவிரமானவை என்பதால், அவற்றை உறுதியான, தெளிவான மற்றும் நம்பகமான சாட்சியங்கள் மூலம் மட்டுமே நிரூபிக்க வேண்டும்.ஆனால் மனுதாரரால் மேற்படி சங்கதிகளை உறுதிபடுத்தும் வகையில் ஆவணங்கள் எதுவும் தாக்கல்

செய்யப்படவில்லை. எனவே, மனுதாரர் தனது மனுவில் கூறியுள்ள குற்றச்சாட்டுகளை சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்க, நம்பகமான மற்றும் உறுதியான ஆவணங்கள் மூலம் நிரூபிக்கத் தவறியுள்ளார் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

முடிவுவாக, மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு ஜீலை மாதம் 7 ம் நாளாகிய இன்று அவையறிய பகரபட்டது.

-Sd/-Ms.T.Subashini-
நீதித்துறை நடுவர் எண்.II,
திருவில்லிபுத்தூர்.